## குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் விசுவாவசு வருடம், மாசி மாதம் 25 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள், திங்கள்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 368/2024**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-004954-2024 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரிகள் பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>தாந்தோணிமலை காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண். 239/2024<br><br>எதிரிகளின் மீது இ.த.ச. 379 ஆவது பிரிவின் கீழ்.<br><br>// எதிரிகள் //<br>A1- சிவக்குமார்(எ)கிஷாபாய்(24/25),<br>த/பெ. சண்முகசுந்தரம்,<br>4/222, முத்தமிழ்புரம்,<br>சோமூர்,<br>மண்மங்கலம்,<br>கரூர் மாவட்டம்.<br><br>A2- சாரதி(24/25),<br>த/பெ. காமராஜ்,<br>ரத்தினம் சாலை,<br>கே.எம்.சி காலனி,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 18.03.2024 |
| 4) | முறையிட்ட நாள் | | 07.05.2024 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 08.05.2024 |
| 6) | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | 08.05.2024 |
| 7) | எதிரிகள் முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 08.05.2024 |
| 8) | எதிரிகள் பிணையில் விடப்பட்ட நாள் | | A1- 18.05.2024<br>A2- 24.05.2024 |

<table>
<tr><td>9)</td><td>எதிரிகள் காவலில் இருந்த நாட்கள்</td><td></td><td>A1- 08.05.2024 to 18.05.2024<br>A2- 08.05.2024 to 24.05.2024</td></tr>
<tr><td>10)</td><td>குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td></td><td>03.07.2024</td></tr>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>A1- திரு. வினோத்குமார் ,<br>A2- திரு. ரவி,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரிகளிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>24.12.2024</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரிகளின் மீது இ.த.ச ச/பி 379 பிரிவின் கீழ்</td></tr>
<tr><td>15)</td><td>எதிரிகளின் பதில்</td><td></td><td>எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td><table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>11.02.2026</td><td>11.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17)</td><td>அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து)</td><td></td><td>இல்லை</td></tr>
<tr><td>18)</td><td>எதிரிகளிடம் கு.வி.மு.ச. 313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள்</td><td></td><td>05.03.2026</td></tr>
<tr><td>19)</td><td>தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள்</td><td></td><td>ஒருவருமில்லை.</td></tr>
<tr><td>20)</td><td>உயர் நீதிமன்றங்களில்</td><td></td><td>ஏதுமில்லை.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 08.10.2024 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 06.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரிகள் குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிகளுக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 09.03.2026 |

## தீர்ப்புரை

1) கடந்த 18.03.2024 ம் தேதி இரவு சுமார் 08.45 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் வெங்கட்ராஜ் என்பவர் பெரிய காரியத்திற்காக கோடங்கிபட்டிக்கு சென்று கலந்து கொண்டுவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக TN 48 T 6549 என்ற எண்ணுள்ள டுவீலரில் உள்ள டேங்கர் கவரில் எனது சாம்சங் கேலக்ஸி A 05 S என்ற சுமார் 12,000/- மதிப்புள்ள ஆண்ட்ராய்டு மொபைல்போனை வைத்துக்கொண்டு வெங்கல்பட்டி ரவுண்டானா அருகில் வந்து வண்டியை நிறுத்திவிட்டு இயற்கை உபாதையை கழிக்க சென்றுவிட்டு வந்து பார்த்தபோது வண்டிக்கவரில் வைத்திருந்த செல்போனை இவ்வழக்கின் எதிரிகள் A1 சிவக்குமார்(எ)கிஷாபாய், A2 சாரதி ஆகியோர்கள் தாங்கள் சுயலாபம் அடையவேண்டிய நோக்கத்திலும், புகார்தாரருக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ரூ.12,000/- மதிப்புள்ள சாம்சங் கேலக்ஸி A 05 S செல்போனை திருடி சென்ற குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கின் எதிரிகளின் செய்கையானது ச/பி 379 இ.த.ச படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 239/2024 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண். 368/2024 ஆக

கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிகளுக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரிகளின் மீது ச/பி 379 இ.த.ச ஆவது பிரிவின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரிகள் அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1,** தனது சாட்சியத்தில், " நான் செல்லாண்டிபட்டி, குமாரப்பாளையத்தில் குடியிருந்து இரும்பு கடையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 18.03.2024 ம் தேதி சுமார் 08.45 மணியளவில் கோடங்கிபட்டி சென்றுவிட்டு TN 48 6549 XL இருசக்கர வாகனத்தில் ஊருக்கு சென்று கொண்டிருந்தேன். வெங்கல்பட்டி பாலம் அருகே இயற்கை உபாதை கழிப்பதற்காக என்னுடைய சாம்சங் கேலக்ஸி என்ற போனை இருசக்கர வாகனத்தின் டேங்கர் கவரில் வைத்துவிட்டு சென்றுவிட்டு வந்தபோது டேங்க் கவரில் இருந்த செல்போனை காணவில்லை. தேடி பார்த்தும் கிடைக்காததால் 07.05.2024 ம் தேதி தாந்தோணிமலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் மனு அ.சா.ஆ.1**. பின்னர் தாந்தோணிமலை போலிசார் செல்போனை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதன்பேரில் காவல்நிலையம் சென்றேன். எனது செல்போனை அடையாளம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் மனுத்தாக்கல் செய்து செல்போனைப் பெற்றுக்கொண்டடேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள சாம்சங் கேலக்ஸி செல்போன் என்னுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2**. போலிசார் என்னை விசாரித்தனர் " என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2,** தனது சாட்சியத்தில்,“நான் பூங்கா நகரில் குடியிருந்து டெயிலர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் ஒரு நபர் கையொப்பம் செய்தார். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. ராயனுார் பஸ்ஸ்டாப் அருகே 08.05.2024ம் தேதி நின்று கொண்டிருந்தபோது போலிசார் ஆஜர் எதிரிகளைப் பிடித்து விசாரித்தனர். பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து இரும்பு கடையில் வேலை செய்யும் நபரிடம் செல்போனைப் பறித்ததாகவும் கூறினார்கள். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 மற்றும் 4"** என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3,** தனது சாட்சியத்தில், “ நான் தாந்தோணிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2024ம் காலை 21.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சண்முகானந்த் வடிவேல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, பாலசுப்பிரமணியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.239/2024, ச.பி.379 இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5.** பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு மறுநாள் சம்பவ இடம் சென்று முருகேசன், ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர், மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.6, 7**. பின்னர், சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன் பேரில் எதிரி சிவக்குமார்(எ)கிஷாபாய் மற்றும் சாரதி 08.05.2024ம் தேதி 02.00 மணியளவில் ராயனுார் பஸ்ஸ்டாப் அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர்களை விசாரித்தபோது முன்னுக்குப்பின் முரணாக கூறியவர்களை காரணம் கூறி கைது செய்து முருகன், ஆனந்த்ராஜ் முன்னிலையில் விசாரித்தபோது சிவக்குமார்(எ)கிஷாபாய் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான தாங்கள் என்னுடன் வந்தால் 18.03.2024ம் தேதி 14.04.2024ம் தேதி நின்று கொண்டிருந்த டுவீலரிருந்து செல்போன்களை திருடிய இடங்களை அடையாளம் காட்டுவேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8**. ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி ஆஜர்படுத்திய VIVO V22 செல்போனை கைப்பற்றுதல் மகசர் மூலம்

கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9**. பின்னர் எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.10.** இத்துடன் சண்முகானந்த் வடிவேல் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து ஆஜர் எதிரிகள் மீது ச/பி.379 இதச படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4,** தனது சாட்சியத்தில், “நான் கணபதிபாளையம் விஜபி நகரில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 08.05.2024ம் தேதி காலை சுமார் 07.15 மணியளவில் வெங்கல்பட்டி பாலம் அருகே சென்று கொண்டிருந்தபோது தாந்தோணிமலை போலிசார் செல்போன் காணாமல் திருடுபோன சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவயிடத்தில் நான் பார்வைமகசரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்" என சாட்சியமளித்துள்ளார்.இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியங்கள் முடித்துக் கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரிகள் தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது இ.த.ச. 379 ஆவது பிரிவின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**பிரச்சனைக்குரிய தீர்வு**

9) அரசு தரப்பில், கடந்த 18.03.2024 ம் தேதி இரவு சுமார் 08.45 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரர் வெங்கட்ராஜ் என்பவர் பெரிய காரியத்திற்காக கோடங்கிபட்டிக்கு சென்று கலந்து கொண்டுவிட்டு மீண்டும் வீட்டிற்கு செல்வதற்காக TN 48 T 6549 என்ற எண்ணுள்ள டுவீலரில் உள்ள டேங்கர் கவரில் எனது சாம்சங் கேலக்ஸி A 05 S என்ற சுமார் 12,000/- மதிப்புள்ள ஆண்ட்ராய்டு மொபைல்போனை வைத்துக்கொண்டு வெங்கல்பட்டி ரவுண்டானா அருகில் வந்து வண்டியை நிறுத்திவிட்டு இயற்கை உபாதையை கழிக்க சென்றுவிட்டு வந்து பார்த்தபோது வண்டிக்கவரில் வைத்திருந்த செல்போனை இவ்வழக்கின் எதிரிகள் A1 சிவக்குமார்(எ)கிஷாபாய், A2 சாரதி ஆகியோர்கள் தாங்கள் சுயலாபம் அடையவேண்டிய நோக்கத்திலும், புகார்தாரருக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் ரூ.12,000/- மதிப்புள்ள சாம்சங் கேலக்ஸி A 05 S செல்போனை திருடி சென்ற குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே இவ்வழக்கின் எதிரிகளின் செய்கையானது ச/பி 379 இ.த.ச படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக தாந்தோணிமலை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 239/2024 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் அ.சா.1 வெங்கட்ராஜ், நிகழ்வுநிலை புகார்தாரர் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “கடந்த 18.03.2024 ம் தேதி சுமார் 08.45 மணியளவில் கோடங்கிபட்டி சென்றுவிட்டு TN 48 6549 XL இருசக்கர வாகனத்தில் ஊருக்கு சென்று கொண்டிருந்தேன். வெங்கல்பட்டி பாலம் அருகே இயற்கை உபாதை கழிப்பதற்காக என்னுடைய சாம்சங் கேலக்ஸி என்ற போனை இருசக்கர வாகனத்தின் டேங்கர் கவரில் வைத்துவிட்டு சென்றுவிட்டு வந்தபோது டேங்க் கவரில் இருந்த செல்போனை காணவில்லை. தேடி பார்த்தும் கிடைக்காததால் 07.05.2024 ம் தேதி தாந்தோணிமலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. பின்னர் தாந்தோணிமலை போலிசார் செல்போனை கண்டுபிடித்துவிட்டதாக சொன்னதன்பேரில் காவல்நிலையம் சென்றேன். எனது செல்போனை அடையாளம் காட்டினேன். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் மனுத்தாக்கல் செய்து செல்போனைப் பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள சாம்சங் கேலக்ஸி செல்போன் என்னுடையது. போலிசார் என்னை

விசாரித்தனர்"  என்று கூறியுள்ளார்.

11) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஆராயும்போது, கடந்த 18.03.2024 அன்று அ.சா.1 அவரது இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது வெங்கல்பட்டி பாலம் அருகே இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றபோது தனது செல்போனை தனது இருசக்கர வாகனத்தின் டேங்கர் கவரில் வைத்துவிட்டு அ.சா.1 திரும்பி வந்து பார்த்தபோது அ.சா.1ன் இருசக்கர வாகனத்தின் டேங்கர் கவரில் வைத்திருந்த தனது செல்போன் காணாமல் போனதால் தாந்தோணிமலை காவல்நிலையத்தில் 07.05.2024 அன்று புகார் கொடுத்ததும் தெரியவருகிறது. மேற்படி இரண்டு மாதங்கள் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணத்தை அ.சா.1 தனது புகார் மனுவிலோ அல்லது முதல்விசாரணை சாட்சியத்திலோ குறிப்பிடவில்லை. பொதுவாக ஒருவரது மொபைல்போனில் குறிப்பாக ஸ்மார்ட் போனில் அவர் தொடர்பு கொள்ளக்கூடிய நபர்களின் பட்டியல்(Contact List), வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் உள்ளிட்ட விவரங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவை இருக்கும். மேலும் மூன்றாம் நபர்கள் கைவசம் மொபைல்போன் சென்றால் அதனை தவறான வழியில் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறான மிக முக்கியமான பொருளான மொபைல்போன் காணாமல் போனது குறித்து எவ்வித பதட்டமோ, அதனை தேடுவதற்கு எவ்வித முயற்சியோ செய்யாமல் இரண்டு மாதங்கள் மிக இயல்பாக இருந்துவிட்டு திடீரென்று ஒருநாள் புகார் கொடுத்ததாக அ.சா.1 கூறியிருப்பது புகாரின் உண்மைத்தன்மை மீது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

12) இவ்வழக்கில் எதிரிகள்தான் அ.சா.1ன் செல்போனை திருடிச் சென்றார்கள் என்பதை காட்டுவதற்கு எவ்வித நேரடி சாட்சிகளோ அல்லது வீடியோ பதிவு காட்சிகளோ இல்லை. இருப்பினும் எதிரிகள் தாமாக முன்வந்து தன் முன்னிலையில் திருடியதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் எனவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் களவுபோன மொபைல்போன் தன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றும் சாட்சியம் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசர் சாட்சியான அ.சா.2 முருகன் என்பவரது சாட்சியம் இவ்வழக்கினை தீர்மானிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

13) மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 முருகன், தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் பூங்கா நகரில் குடியிருந்து டெயிலர் வேலை செய்து

வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் ஒரு நபர் கையொப்பம் செய்தார். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. ராயனுார் பஸ்ஸ்டாப் அருகே 08.05.2024 ம் தேதி நின்று கொண்டிருந்தபோது போலிசார் ஆஜர் எதிரிகளைப் பிடித்து விசாரித்தனர். பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து இரும்பு கடையில் வேலை செய்யும் நபரிடம் செல்போனைப் பறித்ததாகவும் கூறினார்கள்" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேற்படி அ.சா.2 ன் சாட்சியத்தை ஆராய்கையில், ராயனுார் பஸ்ஸ்டாப் அருகே கடந்த 08.05.2024 அன்று நின்று கொண்டிருந்தபோது போலிசார் எதிரிகளை பிடித்து விசாரித்தனர் என்பதும் அவர்கள் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்து இரும்புக்கடையில் வேலை செய்யும் நபரிடம் செல்போனை பறித்ததாக கூறியதும் தெரியவருகிறது. மேற்படி அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரிகள் தன் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றோ அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்படி களவுபோன செல்போனை தன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றோ குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. அதேபோல இவ்வழக்கில் களவு பொருளான மொபைல்போனை அ.சா.1 ன் இருசக்கர வாகனத்தின் டேங்க் கவரிலிருந்து எதிரிகள் எடுத்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியதாகவும் அ.சா.2 எங்கும் கூறவில்லை. இது சம்பந்தமாக அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்தபோது அ.சா.2 தனது சாட்சியத்தில் வெங்கல்பட்டி பாலம் அருகே டேங்க் கவரிலிருந்து ஒரு சாம்சங் கேலக்ஸி செல்போனை எதிரிகள் திருடியதாக தன் முன்னிலையில் ஒப்புக்கொண்டார்கள் எனவும் எதிரிகள் ஆஜர்படுத்திய செல்போனை போலிசார் கைப்பற்றுதல்மகசரில் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான் எனவும் முதல்விசாரணைக்கு முரண்பட்டு கூறியுள்ளார். மேலும் எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையில், **"நான் அரசு தரப்பின் முதல் விசாரணையில் சொன்னது மட்டும்தான் உண்மை என்றால் சரிதான் என்றும் போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் அ.சா.1 எனது நண்பர், உறவினர், தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை தற்போதுதான் முதல்முறை பார்க்கிறேன் என்றால் சரிதான்"** என்று கூறி முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து அவர் நிலையான மனநிலையில் இல்லாதவர் என்பது தெரியவருகிறது. மேற்படி அ.சா.2 ன் சாட்சியத்திலிருந்து எதிரிகள்

உண்மையிலேயே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்களா என்பதிலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.1ன் களவுபோன செல்போன் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டதா என்பதிலும் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

15) அடுத்ததாக புலன் விசாரணை அதிகாரி சார்பாக விசாரிக்கப்பட்ட அ.சா.3, திருமதி. தில்லைக்கரசி உதவி ஆய்வாளர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. சண்முகானந்த வடிவேல், மேற்படி வழக்கினை புலன் விசாரணை செய்து எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் முன்னிருத்தப்பட்ட அரசுதரப்பு சாட்சியங்களையும், சான்றாவாணங்களையும் கவனமாக பரிசீலனை செய்ததில் அ.சா.1ன் செல்போனை எதிரிகள்தான் திருடிச் சென்றார்கள் நேரடியாக பார்த்த சாட்சியங்கள் யாரும் இல்லை. மேலும், எதிரிகள்தான் மேற்படி தனது செல்போனை திருடிய நபர்கள் என்று அ.சா.1 குறிப்பாக எதிரிகளை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. எதிரிகள் தன் முன்னிலையில் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று அரசுதரப்பில் முன்னிருத்தப்பட்ட ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2ம் தனது சாட்சியத்தில் எதிரிகள் தன் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் களவு போன செல்போன் கைப்பற்றப்பட்டதாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிய சான்றாவாணங்களை பரிசீலித்ததில் இருந்து எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் அளவுக்கு சாட்சிய சான்றாவாணங்கள் அளிக்கப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

16) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீதான இ.த.ச.379 ன் படியான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்குச் சொத்தான **ஆர்.பி.எண்.79/2024** ல் கண்டுள்ள

அ.சா.ஆ.2 புகைப்படத்தில் கண்டுள்ள சாம்சங் கேலக்ஸி A 05 S செல்போனை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், மற்றும் மேல்முறையீட்டுக் காலக் கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

18) இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 09.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.09 19:00:29 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1. | வெங்கட்ராஜ் |
| அ.சா.2 | முருகன் |
| அ.சா.3 | திருமதி. தில்லைக்கரசி, காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.4 | ரமேஷ் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | செல்போன் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.9 | கைப்பற்றுதல்மகசர் |
| அ.சா.ஆ.10 | படிவம் 91 |

**<u>அரசுதரப்பு சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள்:-

இல்லை

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.09 19:00:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கரூர்.

| | | |
|---|---|---|
| 09.03.2026<br>**சிசி.எண்.** 368/2024<br><br>எதிரிகள் ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீதான இ.த.ச.379 ன் படியான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தான **ஆர்.பி.எண்.79/2024** ல் கண்டுள்ள அ.சா.ஆ.2 புகைப்படத்தில் கண்டுள்ள சாம்சங் கேலக்ஸி A 05 S செல்போனை அதன் உரிமையாளர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும், மற்றும் மேல்முறையீட்டுக் காலக் கெடுவிற்குப் பின் பிணை முறி தானே ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.09 19:00:55 +0530<br>**நீதித்துறை நடுவர் எண்.1,**<br>**கரூர்.** | | |